தினமணி

## மழை பெய்ததால் மல்லிகை விலை கூடியது

First Published : 23 May 2011 01:38:37 AM IST



மல்லிகைச் செடியில் பூத்துக் குலுங்கும் மல்லிகைப் பூக்கள் (கோப்புப் படம்).

திருத்தணி, மே 22: திருத்தணியில் வெள்ளிக்கிழமை இரவு பெய்த திடீர் மழையால், மல்லிகைப்பூ விலை மீண்டும் அதிகரித்துள்ளது. தற்போது கிலோ ரூ.80.

கடந்த வாரம் வரை ஒரு கிலோ மல்லிகை ரூ.30 முதல் ரூ.40 வரை விற்கப்பட்டதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். தோட்டத்தில் மல்லிகைப் பூக்களை பறிக்கும் செலவை ஈடுகட்ட முடியாமல், பூக்களை பறிக்காமல்கூட சில விவசாயிகள் விட்டுவிட்டனர்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை இரவு திருத்தணி மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் பெய்த திடீர் மழையால் காமராஜர் பூ மார்க்கெட்டிற்கு மல்லிகை வரத்து குறைந்தது. இதனால் விலை அதிகரித்தது. சனிக்கிழமை ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.80 முதல் ரூ.100 வரை விற்கப்பட்டது. ஒரு கிலோ ரோஜா ரூ.40, வாடாமல்லி ரூ.25, மல்லிகைப்பூ 80, முல்லைப்பூ ரூ.100, கோழிக்கொண்டை ரூ.30, சம்பங்கி ரூ.40, கனகாம்பரம் ரூ.150-க்கு விற்கப்பட்டது.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் பழச்செடி வளர்ப்பு பயிற்சி வகுப்பு**

First Published : 22 May 2011 01:47:33 PM IST

நாமக்கல், மே 21: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வீட்டுத் தோட்டத்தில் பழச்செடிகள் வளர்ப்பது தொடர்பான பயிற்சி வகுப்பு வரும் வியாழக்கிழமை (மே 26) துவங்குகிறது.

இரு நாள்கள் நடைபெறும் இப் பயிற்சியில், 8 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கேற்கலாம். இப் பயிற்சியில் பழத்தோட்டம் அமைத்தல், நடவு செய்தல், சொட்டு நீர்ப் பாசனம் மற்றும் பழ மரங்கள் பராமரிப்பு முறைகள் குறித்தும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

பயிற்சியில் சேர விருப்பமுள்ளவர்கள், மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்தை தொடர்பு கொண்டு, தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம். பயிற்சிக் கட்டணமாக இரு நாள்களுக்கும் சேர்த்து ரூ.100 வசூலிக்கப்படும். மேலும் விவரங்களுக்கு 04286-266 345, 266 244 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**அன்னாசி அமோக விளைச்சல்!**

ஜே. லாசர்

First Published : 22 May 2011 01:33:32 PM IST

குலசேகரம், மே 21: கன்னியாகுமரி மாவட்டத்தில் நிகழ் பருவத்தில் அன்னாசி அமோக விளைச்சலைக் கண்டுள்ளது. ஆனால், பழங்களை இருப்புவைத்து விற்கும் வசதியில்லாததால் விவசாயிகள் அவதிக்கு உள்ளாகியுள்ளனர்.

தமிழகத்தில் இம் மாவட்டத்தில்தான் அதிகளவு அன்னாசி சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில் குலசேகரம், களியல், மலைவிளை, கொட்டூர், சுருளகோடு, பன்றிப்பொத்தை, குமாரபுரம், கீரிப்பாறை, பேச்சிப்பாறை, பழங்குடி மக்கள் வசிக்கும் மலைப் பகுதிகளில் சுமார் 200 ஹெக்டர்வரை ரப்பர், தென்னை தோட்டங்களில் ஊடுபயிராக அன்னாசி சாகுபடி செய்யப்படுகிறது.

அன்னாசி வெப்பத்தைத் தாங்கி வளரும் பயிர் என்பதால் இதற்கான சாகுபடி செலவுகள் குறைவு. கடும் கோடை நிலவும் மே, ஜூன் மாதங்களில் அன்னாசி அறுவடை செய்யப்படுகின்றன.

அன்னாசிப் பழங்களை அப்படியே உண்ணலாம். மேலும் அவற்றிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருள்களான ஜாம், ஜூஸ் உள்ளிட்டவை தயாரிக்கப்படுகின்றன. இவற்றுக்கு அதிக சந்தை வாய்ப்புகள் உள்ளன.

மாவட்டத்தில் இப்போது அன்னாசி அமோக விளைச்சல் கண்டுள்ளது. குலசேகரம், மார்த்தாண்டம், திங்கள்நகர், வடசேரி, நாகர்கோவில் அப்டா சந்தைகளில் விவசாயிகள் அன்னாசிப் பழங்களை விற்பனைக்குக் கொண்டு செல்கின்றனர்.

இதுகுறித்து மாவட்ட அன்னை தெரசா அன்னாசி உற்பத்தியாளர் உழவர் மன்றத் தலைவர் பி. ஹென்றி கூறியதாவது:

மாவட்டத்தில் இப்போது அன்னாசிப் பழ சீசன். நிகழ் பருவத்தில் அதிக மகசூல் கிடைத்துள்ளது. சீசன் காலம் என்பதால் பழங்களுக்கு கிலோ ரூ. 12 முதல் ரூ. 15 வரை கிடைக்கிறது. 2 மாதங்களுக்கு முன்பு கிலோ ரூ. 30 வரை விற்பனையானது.

அன்னாசிப் பழங்களை திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் நேரடியாக வந்து மொத்தமாக கொள்முதல் செய்கின்றனர்.

எனினும், சீசன் காலத்தில் ஒரே நேரத்தில் பழங்களை கூடுதல் விலைக்கு விற்க முடியாத நிலை ஒவ்வோர் ஆண்டும் ஏற்படுகிறது.

மாவட்டத்தில் அன்னாசியிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருள்களான ஜாம், ஜூஸ் உள்ளிட்டவை தயாரிக்கும் நிறுவனங்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இல்லை.

அவ்வகை நிறுவனங்கள் இங்கு அதிகம் வர வேண்டும். மேலும் பழங்களை நீண்ட நாள் கெடாமல் பாதுகாக்கும் வகையில் குளிர்பதன அறைகள் இல்லை.

மாவட்டத்தில் குலசேகரம் உள்ளிட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் குளிர்பதன அறைகளை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் மூலம் விவசாயிகளுக்கு அன்னாசியிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருள்கள் தயாரிக்கும் பயிற்சியளிக்க வேண்டும் என்றார் அவர்.

**நெல் மூட்டைகள் தேக்கம்!**

First Published : 22 May 2011 12:58:50 PM IST

நெல் ஆர்வமுடன் வாங்கும் போளூர் கலசபாக்கம், களம்பூர் அரிசி ஆலை உரிமையாளர்களும் இப்போது வாங்கவில்லை. இதனால் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் தேங்கி உள்ளன.

மேலும் நெல் மூட்டைகளை பாதுகாக்க எந்த வசதியும் இல்லை. பெரும்பாலான நெல் விவசாயிகள் சிறு விவசாயிகள் என்பதால் அவர்களிடமும் மூட்டைகளை பாதுகாக்க எந்த வசதியும் இல்லாத நிலை காணப்படுகிறது. விவசாயிகளுக்கு அதிகளவில் நெல் மூட்டைக்கு விலை கிடைக்க அரசே நேரடியாக நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

அரிசி ஏற்றுமதி தடையை நீக்க வேண்டும்!

இதுதொடர்பாக தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் ராஜேந்திரன் கூறியது:

அரசே நேரடி நெல் கொள்முதல் செய்ய வேண்டும். ஆந்திரா பொன்னியும், கர்நாடக பொன்னியும் கொண்டு வந்து விலைக் குறைவாக விற்கின்றனர். இதனால் உள்ளூர் நெல் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளில் அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. நமது நாட்டில் நெல் அபரிதமான விளைச்சல் உள்ளது. உள்ளூரில் நெல் விற்பனை சரிவர இல்லை. அரிசி ஆலைகளும் நெல் வாங்குவதை நிறுத்தி விட்டன. இதற்கு ஓரே வழி அரிசி ஏற்றுமதி தடையை நீக்க வேண்டும்.

கடந்த 2008-க்கு பின்னர் தடை தொடர்கிறது. பற்றாக்குறை வெள்ளை பொன்னி, சிகப்பு அரிசி ல்நாட்டில் சோனாமுசிரி, அதிக தேவை உள்ளது.

தனியார் அரிசி ஆலைகள் இயங்குவதில்லை. அரசு உடனே இவ்விஷயத்தில் தலையிட்டு உடனே தீர்வு காண வேண்டும் என்றார்.

**கொப்பரை விலை உயர்வு**

First Published : 22 May 2011 10:27:11 AM IST

பல்லடம், மே 21: பல்லடத்தில் கொப்பரை விலை உயர்ந்து காணப்பட்டது.

பல்லடம் சுற்றுவட்டாரப் பகுதியில் தென்னை விவசாயம் முக்கியத் தொழிலாக விளங்குகிறது. இப்பகுதியில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன.

கோவை, திண்டுக்கல், மதுரை போன்ற ஊர்களுக்கு தேங்காய் விற்பனைக்கு அனுப்பியது போக, மீதமுள்ளவை கொப்பரையாக மாற்றப்பட்டு பல்லடம், செஞ்சேரி ஆகிய இடங்களில் உள்ள அரசு கொப்பரை கொள்முதல் மையங்கள் மற்றும் காங்கயம், வெள்ளகோவில் பகுதியில் உள்ள தனியார் ஆயில் மில்களுக்கு விற்கப்படுகிறது.

கடந்த ஆண்டு தொடக்கம் முதலே அரசு கொள்முதல் மையங்களில் ஒரு கிலோ கொப்பரை ரூ.44.50 பைசாவிற்கு மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அரசு கொள்முதல் விலையை விட வெளி மார்க்கெட்டில் கொள்முதல் விலை கடந்த ஒராண்டாகவே உயர்ந்து வருகிறது.

இதனால் விவசாயிகள் கொப்பரையை வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்யவே ஆர்வம் காட்டி வருகின்றனர். வெளி மார்க்கெட்டில் ஒரு கிலோ கொப்பரைக்கு ரூ.20 வரை விலை அதிகமாக கிடைக்கிறது.

இதனால் கடந்த 6 மாதமாக அரசு கொள்முதல் மையத்திற்கு கொப்பரை வரத்து இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**மாங்காய் விளைச்சல் குறைவால் விலை அதிகரிப்பு**

First Published : 22 May 2011 11:12:52 AM IST

விருதுநகர், மே 21: காலநிலை மாற்றத்தால் விருதுநகர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மாங்காய் சாகுபடி குறைந்தது (படம்). இதனால் மாங்காய் விலை அதிகரித்துள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் ராஜபாளையம், வத்ராயிருப்பு, தேவதானம், தேவிப்பட்டனம், கூமாப்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய பகுதிகளிலும், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்திலும் சுமார் 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் சப்போட்டா, அல்போன்சா, பஞ்சவர்ணம், கிளிமூக்கு உள்பட பல்வேறு வகையான மா மரங்கள் உள்ளன.

நல்ல முறையில் காய்த்திருந்தால் ஒவ்வொரு மா மரத்திற்கும் சுமார் 2 ஆயிரம் முதல் 5 ஆயிரம் காய்கள் காய்க்கும். இதேபோல் அல்போன்சா மா மரத்தில் இதைவிட அதிகம் காய் பிடிக்கும்.

தற்போது அதிக அளவில் பூக்கள் பிடித்திருந்தது. ஆனால் அதையடுத்து ஏற்பட்ட பருவ நிலை மாற்றத்தால் அதாவது மழை, சூறாவளி, வெயில் போன்ற காரணங்களால் பிஞ்சு காய்க்கும் பருவத்தில் உதிர்ந்து விட்டன. மேலும் கடும் வெயில் காரணமாக மாங்காய்களும் வெம்பி மரத்திலிருந்து கீழே உதிர்ந்துவிட்டன.

அதிக அளவில் காய்க்கும் அனைத்து மரங்களில் குறைந்த அளவிலேயே காய்கள் பறிக்கப்பட்டன. அதாவது ஒரு மரத்திற்கு சுமார் 300 முதல் 500 காய்கள் வரை தான் பறிக்க முடிந்தது. இதனால் மாங்காய் உற்பத்தி குறைவால் விலை அதிகரித்தது.

சப்போட்டா 1 கிலோ ரூ.16 முதல் 18 வரை விலை போகிறது. பஞ்சவர்ணம் காய் 1 கிலோ ரூ.12 முதல் 15 வரை விற்பனை செய்யப்படுகிறது. அல்போன்சா ஒரு கிலோ ரூ.18 முதல் 20 வரை விற்பனை ஆகிறது. கிளிமூக்கு மாங்காய், நீலம் மாங்காய் 1 கிலோ ரூ.7 முதல் 8 வரை விற்கப்பட்டு வருகிறது.

இந்த மாங்காய்களை மதுரை, சென்னை, நெல்லை, நாகர்கோவில் மற்றும் கேரளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர்.

கடந்த ஆண்டு அதிக உற்பத்தி இருந்த நிலையில் குறைந்த அளவே விலை போனது. இந்த முறை உற்பத்தி குறைந்துள்ளதால் மாங்காய்களின் வகைகளுக்குத் தகுந்தாற்போல் விலை அதிகரித்துள்ளது.

இது குறித்து விருதுநகர் மாவட்ட மாங்காய் சாகுபடியாளர்கள் சங்கத்தின் தலைவர் ராமசுப்பிரமணிய ராஜா கூறியதாவது:

இப்பகுதியில் தற்போதும் கடும் வெயில், அடிக்கடி பெய்யும் சாரல் மழை போன்ற பருவ நிலை மாற்றங்களால் மரத்தில் உள்ள மாங்காய்களின் உற்பத்தியும் பாதிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

**வேளாண் விழிப்புணர்வு முகாம்**

First Published : 22 May 2011 11:26:12 AM IST

ராமநாதபுரம், மே 21: ராமநாதபுரம் அருகே களரி கிராமத்தில் வானிலை பருவ மாற்றத்துக்கேற்ற முறையில் விவசாயம் செய்வது தொடர்பான வேளாண்மை விழிப்புணர்வு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு களரி ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயக்குமார், நீர் வள, நில வளத் திட்ட அலுவலர் ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமுக்குத் தலைமை வகித்து ராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் வி. கணேசராஜா பேசுகையில், மாறிவரும் பருவநிலைக்கேற்ப விஞ்ஞான ரீதியாக வேளாண் பயிர்களைச் சாகுபடி செய்வதற்கான செயல் திட்டங்கள் மாவட்டங்களில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையங்கள் மூலமாகச் செயல்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

முதற்கட்டமாக, ராமநாதபுரத்தில் திருப்புல்லாணி ஒன்றியத்தில் களரி கிராமத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

நிகழ்ச்சியில், வேளாண் அறிவியல் நிலையப் பேராசிரியர்கள் கவிதா, அனுராதா, மீனாட்சி ஆகியோரும் கலந்துகொண்டு வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினர்.

தினமலர்

**கடந்த நிதியாண்டில்வேளாண் கடன் 20 சதவீதம் உயர்வு**

மே 23,2011,01:45



புதுடில்லி:கடந்த நிதியாண்டில், வங்கிகள் வழங்கிய வேளாண் கடன், இலக்கு அளவை விட, 20 சதவீதம் அதிகரித்து, 4.5 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்திருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.இது

குறித்து, மத்திய வேளாண் அமைச்சகத்தின், உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், 'மத்திய அரசு, 2010-11ம் நிதியாண்டில், 3.75 லட்சம் கோடி ரூபாய் விவசாயக் கடன் வழங்க திட்டமிட்டு இருந்தது. ஆனால், இதையும் கடந்து, 20 சதவீதம் அதிகமாக, அதாவது, 4.5 லட்சம் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டு இருக்கலாம். கடந்த நிதியாண்டின் முதல் 11 மாதங்களில் மட்டும், 3.72 லட்சம் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது' என தெரிவித்தார்.கடந்த, 2009-10ம் நிதியாண்டில், விவசாயிகளுக்கு, 3.25 லட்சம் கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. ஆனால், இலக்கு அளவை விட அதிகமாக, அதாவது, 3.84 லட்சம் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டது. விவசாயிகளுக்கு, 7 சதவீத வட்டியில், கடன் வழங்கப்படுகிறது.நடப்பு நிதியாண்டில் இருந்து, கடனை முறையாக திரும்பச் செலுத்தும் விவசாயிகளுக்கு, 4 சதவீத அடிப்படையில், கடன் வழங்கப்படும் என, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**விளைச்சல் பாதிப்பால் உலக அளவில் முந்திரி விலை அதிகரிப்பு**

மே 23,2011,01:48



கொச்சி:பருவ நிலை மாற்றத்தால், தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக உலகளவில் முந்திரி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்கு ஆப்ரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியால், முந்திரி வரத்து குறைந்துள்ளது. இதனால், உலகளவில் முந்திரிக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன் இதன் விலையும் உயர்ந்து வருகிறது.

பருவ நிலை மாற்றம் காரணமாக, கடந்த 2010ல், முந்திரி விளைச்சல் 15 முதல் 20 சதவீதம் குறைந்தது. இந்நிலையில், ஆசிய சந்தைகளில் இதற்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. விலை அதிகரிப்பு காரணமாக, முந்திரி பதப்படுத்துவோர் மற்றும் வர்த்தகர்கள், பெரியளவில் முந்திரியை வாங்கி, இருப்பு வைக்காமல், தேவைக்கு ஏற்ப வாங்கினால் போதும் என, வாங்குவதை நிறுத்தியுள்ளனர்.இது குறித்து, மும்பையை சேர்ந்த வர்த்தகர் பங்கஜ் என்.சம்பத் கூறுகையில், 'ஆசியாவில், அடுத்த மூன்று முதல் நான்கு மாதங்களுக்கு சம்பிரதாய

விழாக்கள் மற்றும் பண்டிகை காலம் என்பதால், முந்திரிக்கான தேவை அதிகமாக இருக்கும். 'அதிகளவில், முந்திரி இறக்குமதி செய்யும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்து இறக்குமதி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது' என்றார்.

பொதுவாக, ஜூன் இறுதியில் துவங்கி, ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரையிலான, அதிக பயன்பாட்டு காலத்தில், வர்த்தகர்கள் முந்திரி கொள்முதலில் ஈடுபடுவர். நடப்பாண்டில், விலை அதிகரிப்பால், முந்திரி வாங்குவது குறையும்.

இருப்பினும், தேவை அதிகரிக்கும் நிலையில், பணம் கொடுப்பது பிரச்னையாக இருக்காது. கடந்த ஆறு மாதங்களாக அமைதியாக இருந்த இந்திய சந்தையில், தற்போது சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மேற்கு ஆப்ரிக்க நாடுகளில் இருந்து, முந்திரி ஏற்றுமதி அதி கரிக்கத் துவங்கியுள்ளது. எனினும், அது எதிர்பார்த்த அளவிற்கு இல்லை. சாதாரண நாள்களை விட, கப்பலில் மூலம் வரும் முந்திரி வரத்து சில வாரங்களுக்கு தள்ளி போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், அடுத்த சில மாதங்களுக்கு, முந்திரி வர்த்தகத்தில் மந்த நிலை காணப்படும்.தேவைக்கும், அளிப்பிற்கும் உள்ள இடைவெளி குறையும் போது, முந்திரி சந்தையின் போக்கில் மாற்றம் காணப்படும். அளிப்பு அல்லது நுகர்வு மண்டலங்களில் முந்திரிக்கான தேவை அதிகரித்தால் மட்டுமே, முந்திரி சந்தையின் போக்கில் மாற்றம் காணப்படும் அல்லது அடிப்படை வர்த்தக ரீதியில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். நிலையான சந்தையை தான் நாம் எதிர்பார்க்க வேண்டும் என சம்பத் மேலும் கூறினார்.

கடந்த 2010ல், உலகளவில் முந்திரி கொட்டை வர்த்தகம், ஐந்து லட்சத்து 13 ஆயிரத்து 750 டன்னாக இருக்கும் என, சர்வதேச உலர் பழங்கள் கவுன்சில் (ஐ.என்.சி.,) மதிப்பிட்டுள்ளது. பருவ நிலை மாற்றம் காரணமாக, கடந்த 2010ல், முந்திரி விளைச்சல் அதிகம் உள்ள இடங்களில், 15 முதல் 20 சதவீதம் வரை உற்பத்தி பாதிக்கப்பட்டது.

பல நாடுகளில் பொருளாதாரம் இன்னும் இயல்பு நிலைக்கு திரும்பாததால், முந்திரிக்கான தேவை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் முந்திரி விளைச்சல் 5 முதல் 8 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி பெற்றுள்ளது. இந்தியா, சீனா மற்றும் மத்திய கிழக்கு சந்தைகளில் இது, இரட்டிப்பாக பதிவாகி உள்ளது. ஆசியா, சீனா மற்றும் மத்திய கிழக்கு சந்தைகளின் நுகர்வும் வளர்ச்சி அடைந்துள்ளது. சூப்பர் மார்க்கெட் போன்ற இடங்களில் குறைந்த விலையில் விற்கப்படும் நொறுக்கு தீனிகள் மற்றும் உருளைக்கிழங்கு சிப்ஸ் ஆகியவை முந்திரிக்கு போட்டியாக இருந்தன. ஆனால், தற்போது, ஆரோக்கியம் கருதி முந்திரி மற்றும் உலர் பழங்கள் சாப்பிடுவது அதிகரித்து வருகிறது. இதனால், உலகளவில், சில ஆண்டுகளுக்கு, முந்திரி உள்பட

உலர் பழங்கள் பயன்பாடு அதிகரிக்கும் என, ஐ.என்.சி. அமைப்பு கணித்துள்ளது.ஆசிய நாடுகளின், பொருளாதார வளர்ச்சி மற்றும் செலவிடும் வருவாய் அதிகரித்துள்ளது உள் ளிட்ட காரணங்களால் முந்திரி பயன்பாடும் அதிகரித் துள்ளது.

**விவசாயிகளுக்கு தானிய சேமிப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : மே 23,2011,01:41 IST

திருவூர் : மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் சார்பில், விவசாயிகளுக்கான தானிய சேமிப்பு தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம், திருவள்ளூர் அடுத்த திருவூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடந்தது. சென்னையில் மத்திய அரசின் உணவு, நுகர்வோர் மற்றும் பொது வினியோக அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் சார்பில், திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளுக்கு தானிய சேமிப்பு குறித்த இரண்டு நாள் பயிற்சி முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. திருவூரில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் இரண்டு நாட்கள் நடந்த இம்முகாமில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். தானியங்களை சேகரிப்பதில் ஏற்படும் நடைமுறை சிக்கல்கள் மற்றும் அவற்றை நவீன தொழில்நுட்ப உதவியுடன் தீர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்து அலசப்பட்டது. மேலும், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தால் வழங்கப்படும் சேவைகள், தானிய சேமிப்பை பாதிக்கும் எலி உள்ளிட்ட பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகள், சேமிப்பு கலன்களை கையாளுதல் மற்றும் துல்லிய பண்ணையம் குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. முன்னதாக, மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் சென்னை மண்டல மேலாளர் ஜவகர், சேமிப்புக் கிடங்கு வளர்ச்சி ஆணைய இயக்குனர் யதிந்தர் பிரசாத், வேளாண் இணை இயக்குனர் சீனிவாசலு ஆகியோர் முகாமை துவக்கி வைத்தனர். திருவூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ராமசுப்பிரமணியன், பேராசிரியர் தேவநாதன் பயிற்சி குறித்து விளக்கினர்.

**பயிர் மகசூல் போட்டியில் சாதித்த விவசாயிகளுக்கு பரிசுத் தொகை**

பதிவு செய்த நாள் : மே 23,2011,00:25 IST

விழுப்புரம் : பயிர் மகசூல் போட்டியில் சாதித்த விவசாயிகளுக்கு பரிசுத் தொகைகளை கலெக்டர் பழனிசாமி வழங்கினார். விழுப்புரம் மாவட்டத்தில் ஏக்கருக்கு 4,460 கிலோ நெல் விளைச்சல் செய்து சாதித்த செஞ்சி பொன்பத்தி விவசாயி சம்பத்திற்கு 15 ஆயிரம் ரூபாயும், ஏக்கருக்கு 2,820 கிலோ மணிலா விளைச்சல் செய்து சாதித்த மேல்மலையனூர் ஆத்திப்பட்டு விவசாயி

அறிவுடைநம்பிக்கு 15 ஆயிரம் ரூபாயும், உளுந்து விளைச்சலில் சாதித்த வல்லம் துடுப்பாக்கம் விவசாயி சரோஜாவிற்கு 10 ஆயிரம் ரூபாயும், கம்பு பயிரில் சாதித்த திருநாவலூர் இருந்தை விவசாயி ஆரோக்கியதாசுக்கு 10 ஆயிரம் ரூபாயும் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது. நெல் விளைச்சலில் இரண்டாமிடம் பெற்ற ஏழுசெம்பொன் கிராமத்தைச் சேர்ந்த சாந்தி, மணிலா விளைச்சலில் இரண்டாமிடம் பெற்ற கெங்கவரம் பாப்பாத்தி ஆகியோருக்கு தலா 10 ஆயிரம் ரூபாயும், உளுந்து விளைச்சலில் இரண்டாமிடம் பெற்ற மயிலம் கணபதிப்பட்டு மகேஸ்வரன் மற்றும் கம்பு பயிரில் இரண்டாமிடம் பெற்ற இருந்தையைச் சேர்ந்த விவசாயி அல்போன்சுக்கும் தலா 5000 ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் கலெக்டர் பழனிசாமி பரிசுத் தொகைகளை விவசாயிகளிடம் நேரில் வழங்கி பாராட்டினார்.

**பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்ய வேளாண்துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : மே 23,2011,01:47 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், கால்நடைகளுக்கு உணவு தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்கும் வகையில், விவசாயிகள் பசுந்தாள் உரப்பயிர்களை பயிர் செய்ய வேளாண் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து மாவட்ட வேளாண்மை துறை வெளியிட்ட அறிக்கை: விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் ரசாயன உரங்களின் தொடர்ந்த பயன்பாட்டினால், மண்ணில் ரசாயன குணங்களில் மாற்றம் ஏற்படுவதுடன் மண்வளத்தையும் தொடர்ந்து பாதித்து வருகிறது. பண்ணை இடுபொருட்களின் பயன்பாட்டில் ரசாயன உரங்கள் முக்கிய பங்காற்றுவதால் அவற்றில் தேவைகளை குறைந்து பண்ணை வருமானத்தை அதிகரிப்பது முக்கிய கடமை.

எருக்களான பசுந்தாள் உரமிடுதல், மக்கிய தொழு உரமிடுதல் போன்றவற்றின் பயன்பாட்டில், நம் நாடு உணவுப்பற்றாக்குறையிலிருந்து மீண்டு உணவு சேமிப்புக்கு மாற்றமடைந்துள்ளது. எனவே உரத்துக்கு மாற்றாக மண்ணில் அங்ககப்பொருட்களின் அளவை அதிகரிப்பதற்காக பயிரிடப்படும் பயிர்களே பசுந்தாள் உரப்பயிர்களாகும்.

தர்மபுரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல் பயிர் அறுவடை முடிந்து தற்போது நிலங்கள் தரிசாக உள்ளன. மாவட்டத்தில் கோடை மழை பரவலாக பெய்து வருகிறது. எனவே அடுத்து வரும் சாகுபடி பயிர்களுக்கு ஏற்ற அங்கக சத்துக்களை மண்ணில் நிலை நிறுத்த பசுந்தாள் உரப்பயிர்களை பயிரிடுதவற்கு தற்போது தக்க தருணமாகும்.

இதற்காக பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைபூண்டு, சணப்பு போன்ற பயிர்களில் ஏதேனும் ஒன்றை விவசாயிகள் தேர்வு செய்து பயிரிடலாம். இதில் தக்கை பூண்டு விதையை ஒரு ஏக்கருக்கு, 20 கிலோ வீதம் பயன்படுத்தலாம். விதையுடன் "ரைசோபியம்' உயிர் உரத்தை இரு பாக்கெட்

வீதம் விதை நேர்த்தி செய்து வயலில் விதைக்க வேண்டும். இவற்றை, 45 முதல் 60 நாட்களுக்குள் அறுவடை செய்து வயலில் உழுது விடலாம்.
இதே போல் சணப்பு விதையை ஒரு ஏக்கருக்கு, 15 முதல் 20 கிலோ விதைக்கலாம். விதையுடன் "ரைசோபியம்' உயிர் உரத்தினை இரு பொட்டலம் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். விதைத்த 45 முதல் 60 நாட்களில் அறுவடை செய்து வயலில் உழுது விடலாம். பசுந்தாள் உரப்பயிர்கள் சாகுபடி செய்வதின் மூலமாக ஒரு ஏக்கருக்கு எட்டு முதல் 10 டன் பசுந்தாள் உரமானது கிடைக்கப்பெற்று சுமார் 50 முதல் 70 கிலோ வரை தழைச்சத்து மண்ணில் நிலை நிறுத்தப்படுகிறது.
மண்ணுக்கு பசுந்தாள் உரமிடுவதல் மூலம் மண்ணில் இயற்பியல் மற்றும் வேதியியல் மாற்றங்கள் சாதகமாக அமைகின்றது. மண்ணில் காற்றோட்டத்தினை அதிகரித்து அடிமட்டத்தில் உள்ள ஊட்டச்சத்துகளை உறிஞ்சி மேல்மட்டத்திலுள்ள வேர்களுக்கு கிடைக்க செய்கின்றது.
இதனால், பயிர் மகசூல் 15 முதல் 20 சதவீதம் அதிகரிக்கின்றது. மாவட்டத்தில் பசுந்தாள் உர பயிர்களை சாகுபடி செய்வதற்கு இதுவே தக்க தருணமாகும். எனவே விவசாயிகள் பசுந்தாள் உரப்பயிர்களை காலத்தே பயிர் செய்து உரப்பயன்பாட்டினை குறைத்து மகசூலை பெருக்க வேண்டும். மேலும் விபரங்கள் அறிய விவசாயிகள் அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை அணுகலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**தேங்காய் விலை அதிகரிப்பு : வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : மே 23,2011,02:10 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் அறுவடை செய்த தேங்காய்களை உடனே விற்பனை செய்ய வேண்டும்' என மாவட்ட வேளாண் துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) லட்சுமிராஜ் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 14,700 ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக காவேரிப்பட்டணம், மத்தூர் மற்றும் ஊத்தங்கரை வட்டாரங்களில் அதிக அளவு தென்னை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் தேங்காயில், 70 சதவீதீம் எண்ணெய் பயன்பாட்டுக்கு செல்கிறது. கடந்தாண்டு ஏப்ரல், மே மாதங்களில் ஒரு தேங்காய், 4 ரூபாயில் இருந்து 6 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது, 10 ரூபாயில் இருந்து 12 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
தேங்காயை விற்பனை செய்ய ஏற்ற சரியான முடிவுகளை, விவசாயிகள் எடுக்கும் வண்ணம் தமிழ்நாடு வேளாண் பல்கலையில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம், பொள்ளாச்சி பகுதியில் ஆய்வு நடத்தி அங்குள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில்,

கடந்த 10 ஆண்டாக நிலவிய விலைகளை ஆராய்ந்தது. மே, ஜூன் மாதங்களில் ஒரு தேங்காயின் விலை 10 ரூபாயில் இருந்து 12 ரூபாயாக இருக்கும் என, முடிவுகள் தெரிவிக்கின்றது. கோவை மாவட்டம் பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் இந்த விலை நிலவும். ஆனால் தமிழகத்தின் மற்ற பகுதிகளில் விலை சற்று குறைவாக இருக்கும், என எதிர்பார்க்கப்படுகிறது. விலை ஏற்றம் பெற குறைந்த வாய்ப்புகளே உள்ளன. கிருஷ்ணகிரி மாவட்ட தென்னை சாகுபடி விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த தேங்காய்களை உடனே விற்பனை செய்து அதிக லாபம் பெறலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**துவரை சாகுபடிக்கு வேளாண் துறை அறிவுரை : கோடை மழையை பயன்படுத்த வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : மே 23,2011,02:11 IST

ஓசூர்: ஓசூர் தாலுகாவில் தற்போது பெய்துள்ள கோடை மழையை பயன்படுத்தி துவரை சாகுபடி செய்ய வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.
உதவி வேளாண் இயக்குனர் நாகராஜன் வெளியிட்ட அறிக்கை: ஓசூர் தாலுகாவில் 1,200 ஹெக்டேரில் துவரை சாகுபடி செய்யப்படுகிறது. இப்பயிர் பெரும்பாலும் மானாவாரியாக பயிரிடப்படுகிறது. ஓசூர் பகுதியில் நிலவும் சீதோஷண நிலையும், மண்வளம் துவரை சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளது. தற்போது, பெய்துள்ள கோடை மழையை பயன்படுத்தி விவசாயிகள் நிலத்தை உழவு செய்து துவரை சாகுபடி செய்ய துவங்கி வருகின்றனர். துவரையில் அதிக மகசூல் பெற நவீன தொழில் நுட்ப முறைகளை விவசாயிகள் கையாள வேண்டும்.
ஆனி மற்றும் ஆடி பட்டம் ரகங்கள் ஹெச்.ஓய்.3.சி, எல்.ஆர்.ஜி.41, டி.டி.பி.7, பி.ஆர்.ஜி.1 ஆகிய ரக துவரைகளை தேர்வு செய்து சாகுபடி செய்ய வேண்டும். தனிப்பயிர் ஹெக்டேருக்கு 10 கிலோ சாகுபடி செய்ய வேண்டும். 120க்கு 30 செ.மீ., வரிசையில் துவரையை நடவு செய்ய வேண்டும். விதைப்பதற்கு 24 மணி நேரத்துக்கு முன் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டைசியம் மருந்து கலந்து விதைக்க வேண்டும். இதனால், விதை மூலம் பரவும் அழுகல் நோய், வாடல் நோய்கள் கட்டுப்படுத்தப்படுகிறது.
பூஞ்சான விதை நேர்த்தி செய்த விதைகளை 24 மணி ரேநம் கழித்து 3 டம்ளர் ஆறிய கஞ்சியுடன் 3 பாக்கெட் ரைசோபியம் மற்றும் 3 பாக்கெட் பாஸ்போபாக்டீரியம் ஒரு ஹெக்டேருக்கு தேவையான விதையுடன் நன்று கலந்து 15 நிமிடங்கள் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். ஹெக்டேர் ஒன்றுக்கு கடைசி உழவின் போது அடியுரமாக தொழு உரம் 125 டன் இட வேண்டும். பின்பு 25 கிலோ தழை சத்து, 50 கிலோ மணிசத்து மற்றும் 20 கிலோ சாம்பல் சத்து தரக்கூடிய ரசாயன உரங்கள் இட வேண்டும்.
ஜிப்சம் 110 கிலோ இட வேண்டும். மண்ணனின் மூலம் பரவும் நோய்களில் இருந்து பாதுகாக்க 2.5 கிலோ டிரைக்கோடெர்மா விரிடி என்ற மருந்தை தொழு உரத்துடன் கலந்து சீராக தூவ

வேண்டும். துவரைச்செடி துத்தநாக சத்து குறைப்பாட்டிற்கு விரைவில் இலக்காகும் தன்மை உடையது. துத்தநாகம் குறைவதால் இலைகள் மஞ்சள் நிறத்திலும், இலைகளின் மேல்புறம் பழுப்பு நிறப்புள்ளிகள் காணப்படும். இதை நிவர்த்தி செய்ய ஹெக்டேருக்கு 12.5 துத்தநாக சல்பேட் அடியுரமாக இட வேண்டும்.

மேலும் 5 கிலோ நுண்ணூட்ட கலவையை 20 கிலோ மணலுடன் கலந்து விதைக்கும் முன் மண்ணில் சீராக தூவ வேண்டும். விதைத்த மூன்றாவது நாள் 2.5 லிட்டர் பென்டிமெத்திலின் என்ற களைக்கொல்லி 50 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். பின்னர் 25-35வது நாளில் களை எடுத்தல் வேண்டும். 2 சதம் டி.ஏ.பி., கரைசலை பூக்கும் பருவத்தில் ஒரு முறையும், பின்பு 15 நாள் கழித்து 2வது முறையும் தெளிக்க வேண்டும். 2.50 ஏக்கருக்கு 12.5 கிலோ டி.ஏ.பி.யை., 625 லிட்டர் தண்ணீரில் கரைத்து வடிகட்டி தெளிக்கவும்.

வேளாண் துறை அறிவுறுத்தும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புகளை மேற்கொண்டபின் 80 சதவீதம் விதை முற்றியவுடன் அறுவடை செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் ஹெக்டேருக்கு 2 மெட்ரிக் டன் வரை மகசூல் கிடைக்கும். விவசாயிகளுக்கு தேவைப்படும் விதைகள், உயிர் உரங்கள் மற்றும் ஜிப்சம் போன்றவை மானிய விலையில் வழங்கப்படுகிறது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகள் சங்க ஆலோசனை கூட்டம்**

பதிவு செய்த நாள் : மே 23,2011,02:10 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில், தமிழக விவசாயிகள் சங்க ஆலோசனை கூட்டம் நடந்தது. மாநில பொது செயலாளர் ராமகவுண்டர் தலைமை வகித்தார். கிழக்கு மாவட்ட தலைவர் தேவேந்திரன் முன்னிலை வகித்தார். மத்திய மாவட்ட தலைவர் வேலு வரவேற்றார். கூட்டத்தில், வடமாநில விவசாய சங்க தலைவர் தியாகி மகேந்திரசிங் மறைவுக்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள அ.தி.மு.க., அரசு, தேர்தல் அறிக்கையில் கூறியவாறு கரும்புவிலை, பால்விலை ஆகியவற்றை உயர்த்த வேண்டும். மஹாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தை விவசாயத்துக்கு பயன்படுத்த வேண்டும். கிருஷ்ணகிரி நகராட்சியில் காய்கறி மூட்டைக்கு அதிக கட்டணம் வசூலிப்பதை தடுத்து நிறுத்த வேண்டும், என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

மாவட்ட செயலாளர்கள் வெங்கடேசன், நாகராஜ், திருப்பதி, கேசவரெட்டி, பொருளாளர் சுப்பிரமணிரெட்டி, அசோக்குமார், மகளிர் அணி செயலாளர் மணிமேகலை, பெருமா, பரசுராமன், ஜோதிக்கண்ணன், சாவித்திரி உட்பட பலர் கலந்து கொண்டனர். ஒருங்கிணைந்த மாவட்ட செயலாளர் சுந்தரேசன் நன்றி கூறினார்.

**தென்னையில் நோய் தாக்குதல்: துடப்பம் உற்பத்தி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : மே 23,2011,02:10 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வறட்சி மற்றும் கருந்தலை புழுக்கள் தாக்குதல் காரணமாக, தென்னை ஓலைகள் பாதிக்கப்பட்டுள்ளதால், துடப்பம் உற்பத்தி குறைந்து விலை ஏற்றம் அடைந்துள்ளது.

தமிழகத்தில் ஈரோடு, கோவை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக அளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில், தென்பெண்ணை ஆற்று படுகை பகுதிகளான காவேரிப்பட்டணம், நெடுங்கல், அகரம், அரசம்பட்டி சுற்றுவட்டார பகுதிகள் உள்ளிட்ட பல பகுதிகளில், 2 லட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளது. தென்னை மரத்தில் உள்ள ஓலைகளை கொண்டு துடப்பம் உற்பத்தி செய்வது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குடிசை தொழிலாக உள்ளது.

துடப்பம் உற்பத்தி செய்பவர்களிடம் இருந்து அந்தந்த பகுதியில் உள்ள சிறு வியாபாரிகள் துடப்பத்தை வாங்கி கிருஷ்ணகிரி மற்றும் காவேரிப்பட்டணம் பகுதியில் உள்ள மொத்த வியாபாரிகளுக்கு கிலோ 5 ரூபாய் என்ற அளவில் விற்பனை செய்கின்றனர். இதனை தரம்பிரிக்கும் மொத்த வியாபாரிகள் லாரிகள் மூலம் டெல்லி மற்றும் பஞ்சாப் மாநிலத்துக்கு அனுப்பி வைக்கின்றனர்.

மாவட்டத்தில் தற்போது வறட்சி மற்றும் கருந்தலைபுழுக்களின் நோய் தாக்குதல் காரணமாக தென்னை ஓலைகள் பாதிக்கப்பட்டுள்ளது. நோய் தாக்கிய தென்னை ஓலைகளில் உள்ள குச்சிகளும் பாதிக்கப்பட்டுள்ளதால் அதனை துடப்பம் செய்ய பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. இதன் காரணமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் துடப்பம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால் துடப்பத்தின் விலையும் உயர்ந்துள்ளது.

இது குறித்து காவேரிப்பட்டணத்தை அடுத்த நெடுங்கல்லில் மொத்த துடப்பம் வியாபாரம் செய்து வரும் சண்முகம் கூறியது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், உள்ள தென்னை மரங்களில் இருந்து கீழே விழும் ஓலைகளில் இருந்து கடந்த காலங்களில் அதிக அளவு துடப்பம் உற்பத்தி செய்யப்பட்டது. அப்போது, ஒரு கிலோ குச்சிகளை கொண்ட துடப்பம், 3 ரூபாயக்கு வாங்கி ஏற்றுமதி செய்யப்பட்டது. தற்போது மாவட்டத்தில் தென்னை மரங்களில் நோய் தாக்குதல் மற்றும் வறட்சி கராணமாக, மரங்களை வெட்டி வருவதல் போன்ற காரணங்களால் துடப்பம் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன், மாதம் 15 லோடு துடப்பத்தை லாரி மூலம் வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைத்தோம். தற்போது மாதத்திற்கு 5 நான்கு லோடு துடப்பம் மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகிறது. உற்பத்தி குறைவால் துடப்பத்தின் விலையும் உயர்ந்துள்ளது. தற்போது, ஒரு கிலோ குச்சி கொண்ட துடப்பம், 8 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதனை வாங்கி தரம் பிரித்து நாங்கள் ஏற்றுமதி செய்கிறோம். வெளி மாநிலங்களில் துடப்பத்திற்கு நல்ல கிராக்கி உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**கோபி சங்கத்தில் வாழை வரத்து குறைவு**

பதிவு செய்த நாள் : மே 23,2011,02:23 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாழை வரத்து குறைந்ததால் விலை அதிகரித்துள்ளது. கோபி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் புதன்கிழமை வாழை ஏலம் நடக்கிறது. கோபி, டி.என்.பாளையம், கள்ளிபட்டி, அத்தாணி, கொடுமுடி, கரூர், கூகலூர், சவுண்டப்பூர், பவானி பகுதிகளில் இருந்து வாழை வரத்தாகிறது.

சென்ற வாரம் 7,000 வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தன. நடப்பு வாரம் 6,000 தார்கள் மட்டுமே வரத்தானது. கதளி கிலோ 18.20 ரூபாய், நேந்திரம் கிலோ 20 ரூபாய், செவ்வாழை தார் 505 ரூபாய்க்கு விற்றது. ரொபஸ்ட்ரோ 280 ரூபாய், தேன்வாழை 387 ரூபாய், மொந்தன் 327 ரூபாய், பச்சை நாடன் 200 ரூபாய், பூவன் 300 ரூபாய்க்கு விற்றது. மொத்தம் நான்கு லட்சம் ரூபாய்க்கு வாழை ஏலம் நடந்தது. வாழை சீஸன் உற்பத்தி குறைந்துள்ள நிலையில் வாழை வரத்து குறைந்து காணப்பட்டது. சென்ற வாரத்தை விட நடப்பு வாரம் வாழை வரத்து 1000 தார் வரை குறைந்ததால் விலை உயர்ந்துள்ளது.

**"மஞ்சளுக்கு நல்ல விலை'**

பதிவு செய்த நாள் : மே 23,2011,00:52 IST

கோவை : "மஞ்சளுக்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைத்தும், விற்பனை செய்தும் பயன்பெறலாம்' என, கோவை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தெரிவித்துள்ளது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் கண்காணிப்பாளர் ஆறுமுகராஜன் அறிக்கை: கோவை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பிரதி வாரம் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில், மாலை 6.00 மணியளவில் மஞ்சள் ஏலம் நடக்கிறது. கடந்த முறை நடந்த ஏலத்தில் ஏழு வியாபாரிகள் பங்கேற்றனர். இதில் 373 மஞ்சள் மூட்டைகள் ஏலத்திற்கு வந்தன. விரலி மஞ்சள் குறைந்த பட்சம் குவிண்டால் 7,769 ரூபாய்க்கும், அதிகபட்சமாக 8,319 ரூபாய்க்கும் விற்பனையானது. கிழங்கு மஞ்சள் குவிண்டால் 6,855 ரூபாய்க்கும், அதிகபட்சமாக 7,251 ரூபாய்க்கும் விற்பனையானது. எனவே விவசாயிகள், மஞ்சளை இருப்பு வைத்தும், விற்பனை செய்தும் பயன்பெறலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**பயறு உற்பத்தி அதிகரிக்க என்ன வழி? வேளாண் கருத்தரங்கில் தகவல்**

பதிவு செய்த நாள் : மே 23,2011,00:52 IST

கோவை : ""விதை விதைப்பான், நீர் தெளிப்பான் போன்ற நவீன கருவிகளை பயன்படுத்தினால், பயறு மகசூலை அதிகப்படுத்தலாம்,'' என, வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி யோசனை தெரிவித்தார். பயறுவகை பயிர்களுக்கு வருடாந்திர ஆராய்ச்சி ஆய்வு குறித்த இரண்டு நாள் கருத்தரங்கு, கோவை வேளாண் பல்கலையில் நடந்தது. பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது: பயறு வகைகளை பயன்படுத்துவோர் எண்ணிக்கை உள்நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்துக் வருவதால் பயிறு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நிலை உள்ளது. தற்போது தமிழகத்தில் உற்பத்தி திறன் எக்டேருக்கு 454 கிலோவிலிருந்து 300 கிலோவாக குறைந்துள்ளது. விஞ்ஞானிகள் பயிறு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்க ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டும். பயறு உற்பத்தியை அதிகப்படுத்த விதை விதைப்பான் கருவி மற்றும் நீர் தெளிப்பான் பயன்படுத்தலாம். வேளாண் பல்கலை பயறு வகைகளை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கும் விதமாக அதிக விலைக்கு கொள்முதல் செய்யலாம் என அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. விதை மாற்று அளவு 10 சதவீதத்துக்கு குறைவாக உள்ளதால் விவசாயத்துறை மூலம் ஆதாரநிலை விதைகளை உற்பத்தி செய்து வினியோகம் செய்ய திட்டமிட்டுள்ளது. சான்று நிலை விதைகளை தேவைக்கேற்றவாறு உற்பத்தி செய்ய ஆராய்ச்சி நிலையத்தை தேர்ந்தெடுத்துள்ளது. இவ்வாறு, துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார். கருத்தரங்கில், பல்கலை ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா, வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி மைய இயக்குனர் அஜ்ஜன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**சாம்ப நெல்லிக்கா பழம் விற்பனை "விறுவிறு'**

பதிவு செய்த நாள் : மே 23,2011,01:27 IST

வால்பாறை : வால்பாறையில் கோடை வெயிலின் தாகத்தை தீர்க்க "சாம்பநெல்லிக்கா பழம்' விற்பனை சூடுபிடித்துள்ளது. வால்பாறை மலைப்பகுதியிலேயே விளையக்கூடிய "சாம்பநெல்லிக்காபழம்' சுற்றுலாப்பயணிகள் ருசித்து சாப்பிடுகின்றனர். இது குறித்து வால்பாறை வியாபாரி ஒருவர் கூறியதாவது: வால்பாறையில் உள்ள எஸ்டேட் பகுதிகளில் மட்டுமே இந்த பழம் கிடைக்கிறது. இந்த பழத்தில் புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு போன்ற இருப்பதால் மக்கள் (குறிப்பாக குழந்தைகள்)அதிக அளவில் சாப்பிடுகின்றனர்.
கோடை வெயிலின் போது மட்டும் விளையும் இந்த பழத்திற்கு வெங்காயப்பழம் என்றும், ஜம்முக்கா பழம் என்றும், சாம்பநெல்லிக்காபழம் என்றும் அழைக்கப்படுகிறது.

மருத்துவகுணமுடைய இந்தப்பழம் ஒரு கிலோ ரூ.20 க்கு கிடைப்பதால் மக்கள் ஆர்வத்துடன் வாங்கிசெல்கின்றனர் என்றார்.

**விவசாயிகளுக்கு விதை சான்று துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : மே 23,2011,01:28 IST

உடுமலை : காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைக்க விதை சான்று துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக விதை ஆய்வு துணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

விதை ஆய்வு துணை இயக்குனர் பொன்னுசாமி நடேசன் அறிக்கை: விதை சான்று துறையின் கீழ் இயங்கும் விதை ஆய்வு துணை இயக்குனரகத்தின் மூலம் தரமான விதைகள் விவசாயிகளுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பல்வேறு காரணங்களால் விவசாயிகள் தனியார் நாற்றுப்பண்ணைகளில் நாற்றுகளை வாங்கி நடவு செய்கிறார்கள். அவ்வாறு நாற்றுகளை வாங்கும் போது விவசாயிகள் கண்காணிக்க வேண்டியவை:

*நாற்று பண்ணை விதை ஆய்வு துணை இயக்குனரிடம் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.

*நாற்றுகள் தயார் செய்ய ஆதாரமான தாய் விதை கொள்முதல் செய்த விவரம் இருக்க வேண்டும்.

*நாற்றுகளை வாங்குபவர் தாய் விதை கொள்முதல் செய்த விவரம் கேட்டால் அவசியம் காண்பிக்க வேண்டும்.

*நாற்று விற்பனையாளர் நாற்றுகளை வாங்குபவர்களுக்கு வாங்குபவர் மற்றும் விற்பனையாளர் கையொப்பமிட்டு முகவரியுடன் விற்பனையுடன் பட்டியல் வழங்க வேண்டும்.

*தாய் விதை வாங்கியதற்கான கொள்முதல் பட்டியல் மற்றும் இருப்பு பதிவேடு விதை விற்பனை சட்டத்திற்குட்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

*நாற்றுப்பண்ணைகளில் ரகம் மற்றும் குவியல் எண், காலாவதி நாள் குறிப்பிட வேண்டும்.

விவசாயிகள் தங்களுக்குள் நாற்றுகளை தயார் செய்து கொள்பவர்களாக இருந்தால் ஒட்டு ரகங்களுக்கு உரிய எப் 1.,(முதல் ஒட்டு) விதைகளையே வாங்கி நாற்றுகளை தயார் செய்து நடவு செய்யவும். சில விவசாயிகள் அறியாமையில் தங்கள் வயல்களிலிருந்து சேகரிக்கப்பட்ட பழங்களிலிருந்து விதைகளை எடுத்து நாற்றுகளை தயார் செய்து பிற விவசாயிகளுக்கு குறைந்த விலையில் நாற்றுகளை விற்பனை செய்வது தவறான நடைமுறையாகும். இதனால், சாகுபடியில் மகசூல் பாதிக்கப்படும். ஒட்டுரகங்களில் பழங்களிலிருந்து விதைகளை எடுத்து நாற்றுகளை தயார் செய்வது தவறானதாகும். எனவே விவசாயிகள் மேற்கண்ட அறிவுரைகளை பின்பற்றி தரமான நாற்று மற்றும் விதைகளை கொள்முதல் செய்ய வேண்டும் இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சூரியகாந்தி வரத்து குறைந்தது**

பதிவு செய்த நாள் : மே 23,2011,01:23 IST

வெள்ளகோவில் : வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், சூரியகாந்தி வரத்து இவ்வாரம், 978 மூட்டையாக குறைந்தது. திண்டுக்கல், கரூர், ஈரோடு, அரவக்குறிச்சி, முத்தூர் பகுதிகளை சேர்ந்த 500 விவசாயிகள் 8 ஆயிரத்து 560 மூட்டை சூரியகாந்தி விதை ஏலத்துக்கு கொண்டுவந்தனர். கடந்த வாரம் திங்கள் அன்று நடந்த ஏலத்தில் சூரியகாந்தி விதை தரம் அடிப்படையில், முதல் தரம் கிலோவுக்கு ரூ. 34; இரண்டாம் தரம் ரூ. 27.34 என விலை நிர்ணயிக்கப்பட்டது; 52 லட்சத்து 46 ஆயிரத்து 729 ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. வியாழன் அன்று நடந்த ஏலத்தில் முதல்தரம் ரூ. 34.39; இரண்டாம் தரம் ரூ.29 என விலை நிர்ணயிக்கப்பட்டது. 79 லட்சத்து 34 ஆயிரத்து 910 ரூபாய்க்கு சூரியகாந்தி வர்த்தகம் நடந்தது. இவ்வாரம் திங்கள் மற்றும் வியாழனில் நடந்த ஏலத்தில் பூனாச்சி, காரமடை, ஈரோடு, தாராபுரம், காங்கயம் பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் 45 பேர் கலந்து கொண்டு சூரியகாந்தி கொள்முதல் செய்தனர். இருநாட்கள் நடந்த ஏலத்தில் மொத்தம் ஒரு கோடியே 31 லட்சத்து 81 ஆயிரத்து 639 ரூபாய்க்கு சூரியகாந்தி வர்த்தகம் நடந்தது. பல்வேறு பகுதிகளில் அறுவடை முடிவடைந்து வருவதால், விற்பனை கூடத்துக்கு சூரியகாந்தி வரத்து படிப்படியாக குறைந்து வருகிறது; வரும் வாரங்களில் வரத்து மேலும் குறையும் வாய்ப்புள்ளது. தற்போது சாகுபடி நடந்துவருவதால், இரு மாதங்களுக்கு பின் சூரியகாந்தி வரத்து அதிகரிக்கும், என விவசாயிகள் கூறினர்.

**வரத்து குறைவு; முருங்கை விலை ஏற்றம்**

பதிவு செய்த நாள் : மே 23,2011,01:17 IST

வெள்ளகோவில் : காய்கறி விலை ஏற்றம், இறக்கம் இன்றி சீராக இருந்து வருகிறது; வரத்து குறைவால் வெள்ளகோவில் வாரச்சந்தையில் முருங்கை விலை ஏறியுள்ளது; முருங் கை விலை அதிகரிப்பு, விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது. வாரச்சந்தையில் காய்கறி விலை நிலவரம்: வாரச்சந்தையில் நேற்று, தக்காளி ரூ.10; பாகல் 20; காரட் 30;பீர்க்கன்காய் 20; சின்ன வெங்காயம் 20; பெரிய வெங்காயம் 15; கோஸ் 10; முள்ளங்கி 10; பீட்ரூட் 20; கொத்தவரை 10; கத்தரி 20; காலிபிளவர் 10 ரூபாய் என காய்கறி விலை நிலவரம் காணப்பட்டது. மூலனூர், முத்தூர், அரவக்குறிச்சி உட்பட வெள்ளகோவில் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து சந்தைக்கு முருங்கை வரத்து குறைந்து காணப்பட்டது. வரத்து குறைந்ததை அடுத்து, விலை அதிகரித்தது. செடி முருங்கை (25 காய் கொண்ட கட்டு) ரூ.20ல் இருந்து 30 ரூபாய்; மர முருங்கை 20ல் இருந்து 25 ரூபாயாக விலை அதிகரித்தது.சில்லரை வர்த்தகத்தில் ஒரு காய் ரூ.1.75க்கு விற்கப்பட்டது. கடந்த வாரங்களை விட, முருங்கை விலை அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி

அடைந்துள்ளனர். வரத்து மேலும் குறையும் பட்சத்தில், வரும் வாரங்களில், நல்ல விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு, முருங்கை விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

**கொத்தமல்லி பயிரிட்டால் அதிக லாபம் : விவசாயிகளுக்கு தோட்டக்கலை அழைப்பு**

பதிவு செய்த நாள் : மே 23,2011,01:53 IST

தா.பேட்டை: "தா.பேட்டை வட்டார விவசாயிகள் கொத்தமல்லி பயிரிட்டு அதிக லாபம் அடையலாம்' என்று தோட்டக்கலை உதவி அலுவலர் முருகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: விவசாயிகள் ஜூன், ஜூலை மாதங்கள் கொத்தமல்லி பயிரிட்டு பலன் பெற ஏற்ற பருவம் ஆகும். வடிகால் வசதியுடன் கூடிய செம்மண் மற்றும் வண்டல் மண் கொத்தமல்லி பயிரிட ஏற்றது. முதலில் நடவு வயல் தயாரிக்க நிலத்தை உளி கலப்பைக் கொண்டு ஒரு முறையும், சட்டிக் கலப்பைக் கொண்டு ஒரு முறையும் கொக்கி கலப்பைக் கொண்டு மூன்று முறையும் உழவு செய்ய வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட் ஒரு ஹெக்டேருக்கு 188 கிலோ மற்றும் தொழு உரம் 10 டன்கள் என்ற அளவில் அடி உரமாக இட்டு கொக்கி கலப்பைக் கொண்டு கடைசி உழவு செய்ய வேண்டும். நான்கு அடி அகலமும், ஒரு அடி உயரமும் கொண்ட மேட்டுபாத்திகளை அமைத்து சொட்டு நீர் பாசன பக்கவாட்டு இணைக் குழாய்களை மேட்டுப் பாத்தியின் மையத்தில் இருக்குமாறு வைக்கவேண்டும்.

ஒரு ஹெக்டேருக்கு 10 முதல் 12 கிலோ வரை விதைகள் தேவைப்படும். விதைகளை விதைக்கும் முன் விதையை நேர்த்தி செய்து உலர்த்தி, பின் விதைக்க வேண்டும். விதைகளை இரண்டாக உடைத்து மேட்டுபாத்திகளில் 20 செ.மீ., இடைவெளியில் கோடு கிழித்து வரிசையாக மேட்டுபாத்திக்கு ஐந்து வரிசை என்ற அளவில் விதைக்க வேண்டும்.

முதல் நீர் பாசனம் சொட்டு நீர் மூலம் எட்டு முதல் 12 மணி நேரம் நிலம் நன்கு நனையும் வரை தண்ணீர் பாசனம் செய்வது அவசியம். பயிரின் வளர்ச்சி காலம் முழுவதும் மூன்று நாட்கள் இடைவெளியில் ஒரு ஹெக்டேருக்கு 60 கிலோ கிராம் சாம்பல் சத்தினை உர பாசன முறையில் கொடுக்க வேண்டும். விதைத்த எட்டாம் நாள் முதல் 15 நாட்களுக்குள் விதை முளைக்க துவங்கும். 30ஆம் நாள் ஒவ்வொரு வரிசையிலும் ஒவ்வொரு செடிக்கும் 15 செ.மீ., இடைவெளி இருக்குமாறு செடிகளை களைந்து விட வேண்டும்.

அடுத்து 30ம் நாள் களை எடுத்தல் அவசியம். விதைத்த 30-40ம் நாட்களில் அறுவடை செய்யலாம். ஹெக்டேருக்கு ஆறு முதல் ஏழு டன் வரை மகசூல் கிடைக்கும். கொத்தமல்லி பயிரில் தண்டு வீக்கம் சாம்பல் நோய் உள்ளிட்ட நோய் தாக்குதல், தடுப்பு முறை குறித்தும் சாகுபடியில் உள்ள சந்தேகம் குறித்தும் தா.பேட்டை தோட்டக்கலை அலுவலகத்தில் அலுவலர்களை நேரில் சந்தித்து விவசாயிகள் விளக்கம் பெறலாம்.

**"எண்ணெய் வித்துக்களுக்கு கந்தக சத்து அவசியம்'**

பதிவு செய்த நாள் : மே 23,2011,02:28 IST

மதுரை : பயறு, எண்ணெய் வித்துக்களுக்கு கந்தக சத்து அவசியம் தேவைப்படுகிறது என மதுரை மாவட்ட விவசாய இணை இயக்குனர் சங்கரலிங்கம் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை: விவசாய பயிர்களுக்கு தழை, மணி, சாம்பல் சத்துக்களுக்கு அடுத்து கந்தக சத்து தேவை. இது பயிர்களில் பச்சையம் உற்பத்தி, புரத சத்துக்கான அமீனோ அமில உற்பத்தி, எண்ணெய் வித்துக்களில், எண்ணெய் அளவை அதிகரிக்க பயன்படுகிறது. உயர் விளைச்சல் ரகங்களை பயிரிட்டு யூரியா, டி.ஏ.பி., உரமிடுவதால் கந்தக பற்றாக்குறை பரவலாக உள்ளது.இதன் பற்றாக்குறையால் இளம் இலைகள் மஞ்சள் நிறமாக மாறிவிடும். பயிர்வளர்ச்சி பாதிக்கப்படும். இயற்கையான கம்போஸ்ட், தொழு உரம், பசுந்தாள் உரங்களில் கந்தகம் அதிகம் உள்ளது. ரசாயன உரங்களில் அம்மோனியம் சல்பேட் பரவலாக பயன்படுத்தப்படுகிறது. எனவே கடலைக்கு ஜிப்சம் இடுவதன் மூலம் கந்தகத்தின் தேவை ஓரளவு பூர்த்தியாகிறது. பயறு வகைகளில் இதுபோன்ற குறைபாட்டை நீக்க ஏக்கருக்கு 4 கிலோ வீதம் கந்தகச் சத்தை அடியுரமாக இட வேண்டும். நிலக்கடலை பயிர் பாதிக்கப்படுவதை தவிர்க்க, ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் அடியுரமாக இட வேண்டும்.
ஐந்து கிலோ கடலை நுண்ணாட்டச்சத்தை மண்ணுடன் கலந்து இடவேண்டும். கடலை விதைத்த 45வது நாள் மண்ணில் ஈரம் இருக்கும்போது மீண்டும் 80 கிலோ ஜிப்சம் இடவேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**தென்னை நல வாரியத்தில்குறைவான விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : மே 22,2011,00:03 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்:தென்னை நல வாரியத்தில் குறைவான விவசாயிகளே சேர்ந்து வருகின்றனர்.கடந்த தி.மு.க., ஆட்சியில் வேளாண்மை துறையின் கீழ் இருந்த தென்னை மர வளர்ப்பு தோட்டக்கலைத்துறையின் கீழ் கொண்டு வந்தது. தென்னை விவசாயிகளுக்கு அரசு மானியம் கிடைக்கும் வகையில் நல வாரியம் துவக்கப்பட்டது. இதற்காக விவசாயிகள் தங்கள் நிலத்தின் சிட்டா, அடங்கல் போன்றவைகளுடன், ரேஷன்கார்டு ,போட்டோ வழங்கி உறுப்பினராக சேர்ந்து கொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டது. இதில் சேர குறைந்த பட்சம் 35 தென்னைமரங்கள் வளர்க்கப்பட வேண்டும். 35முதல் 500 மரம் வரை 100 , 1000 வரை 200 , 1001 க்கு அதிகமாக வைத்திருப்பவர்களுக்கு 500 ரூபாயும் கட்டணமாக வழங்க வேண்டும். இத்திட்டம் கடந்த பிப்ரவரி மாதம் முதல் அமலுக்கு வந்தது. இதில் சேரும் விவசாயிகளுக்கு மானியத்தில்

உரங்கள், மருந்துகள் வழங்கப்படுகிறது. நிலங்களை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்யும் விவசாயிகள் அதிகளவில் உள்ளதால், இத்திட்டத்தில் சேர விவசாயிகள் போதிய ஆர்வம் காட்டாமல் உள்ளனர். இதனால் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் ஆயிரத்திற்கும் மேலான ஏக்கரில் தென்னை விவசாயம் நடந்தும், மிக குறைந்தளவே நல வாரியத்தில் உறுப்பினராக சேர்ந்துள்ளனர்.

**முந்திரி, சப்போட்டா விளைச்சல் சிவகங்கை மாவட்டத்தில் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : மே 22,2011,21:35 IST

மானாமதுரை : சிவகங்கை மாவட்டத்தின் முக்கிய விவசாயமான முந்திரி, சப்போட்டா விளைச்சல் இந்த ஆண்டு பாதிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் ஜனவரி,பிப்ரவரி மாதங்களில் முந்திரி,சப்போட்டா மரங்கள் பூக்கும் தருணமாகும். மானாமதுரையில் ஆயிரத்து இருநூறு ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட முந்திரி,சப்போட்டா தோட்டங்களில் இந்தாண்டு எதிர்பார்த்த மழை இல்லாததாலும், கோடைக்கு முன் கடும் வெப்பத்தாலும் முந்திரி,சப்போட்டா பூக்கள் சரியாக பூக்கவில்லை.இவற்றை நம்பி இருந்து விவசாயிகள், குத்தகைதாரர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குத்ததைதாரர் பாண்டி கூறுகையில் ., " வழக்கமாக மே மாதம் முந்திரி பருப்பு ஏற்றுமதிக்கு தயாராகி விடும். இந்தாண்டு எதிர்பார்த்த அளவு மரங்களில் காய் பிடிக்கவில்லை. பூத்த பூக்களும் பிஞ்சியிலேயே கருகிவிட்டன. சப்போட்டாவும் எதிர்பார்த்த பலனை தரவில்லை.மரம் ஒன்றுக்கு 150 கிலோ மகசூல் தரக்கூடிய மரங்களில் 50 கிலோ கிடைப்பதே பெரிய விஷயமாக இருக்கிறது'என்றார்.

**நத்தம் பகுதியில் மா சாகுபடி அதிகரிப்பு: விலை இல்லை**

பதிவு செய்த நாள் : மே 22,2011,21:18 IST

நத்தம் : நத்தம், சாணார்பட்டி பகுதிகளில் இந்த ஆண்டில் மா சாகுபடி அதிகரித்துள்ள போதும், சென்ற ஆண்டை விட விவசாயிகளுக்கு குறைவான லாபமே கிடைக்கிறது. நத்தம் பகுதியில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு ஆண்டுதோறும் மார்ச் முதல் ஜூன் வரை மா சீசன் நடைபெறும். இந்த ஆண்டில் மா மரங்களில் 60 சதவீதம் வரை பூக்கள் காணப்பட்டபோதிலும், பூக்கள் கருகியதில், 50 சதவீதம் மட்டுமே காய் பிடித்தது. நத்தம், வத்திப்பட்டி, செந்துறை, பரளி, சாணார்பட்டி, கோபால்பட்டி, வேம்பார்பட்டி மா கமிஷன் மண்டிகளுக்கு மாங்காய் வரத்து தற்போது அதிகரித்துள்ளது. கமிஷன் மண்டி உரிமையாளர் ஹரிகரன் கூறிதாவது: இந்த ஆண்டில் தமிழகத்தில் 50 சதவீதம் வரை மட்டுமே

மகசூலாகியுள்ளது. மார்க்கெட்டில் ஒரு கிலோ கல்லாமை ஐந்து முதல் ஆறு ரூபாய்க்கும், செந்தூரம் ஆறு ரூபாய் முதல் எட்டு ரூபாய்க்கும், மல்கோவா 20 முதல் 25 ரூபாய்க்கும், பங்கனபள்ளி 13 ரூபாய்க்கும், காலப்பாடி 10 முதல் 15 ரூபாய்க்கும், கிரேப் ஆறு முதல் ஏழு ரூபாய்க்கும், இமாம் பசந்த் 25 முதல் 30 ரூபாய்க்கும், காதர் 20 முதல் 25 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இவ்விலைஅடிப்படையிலேயே தான் வெளி மாநில வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். சென்ற ஆண்டு மா சீசனில் மா வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் அபரிதமான லாபம் கிடைத்தது. இந்த ஆண்டு குறைந்த அளவு லாபமே கிடைக்கிறது, என்றார்.

**மலர் கண்காட்சியில் பழங்கள்: பார்வையாளர்கள் வியப்பு**

பதிவு செய்த நாள் : மே 22,2011,01:09 IST

ஊட்டி:ஊட்டி மலர் கண்காட்சியில் இடம் பெற்றுள்ள அலங்கார வகை மினியேச்சர் பழ வகைகள் மற்றும் மலர்கள் சுற்றுலா பயணிகளை கவர்ந்தன.கோடை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான, ஊட்டி மலர் கண்காட்சி நேற்று முன்தினம் துவங்கியது.
இதில், 15 ஆயிரம் மலர் தொட்டிகளில் வைக்கப்பட்ட மலர்கள்; கொய்மலர்களால் செய்யப்பட்ட பல அலங்காரங்கள் இடம் பெற்றிருந்தன. நட்சத்திர ஓட்டல்களில் அலங்காரங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் மினியேச்சர் பழங்கள் மற்றும் மலர்கள் சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்தன. வாழை, அன்னாசி பழம், ஹெலிகோனியா மலர்கள் என பல அலங்கார வகை அமைப்புகள் வியப்பில் ஆழ்த்தின.
இங்கு அரங்கு அமைத்துள்ள சசிகுமார் கூறுகையில்,""நாகர்கோவில் அருகே தக்கலையில் ஒன்றரை ஏக்கரில் அலங்கார மலர் மற்றும் பழ வகைகளுக்கென்று தோட்டம் அமைத்துள்ளேன். இதில், ஆர்கிட், வாழை, அன்னாசி, தாமரை, இந்தோனியா பேக்ஜிஞ்சர், ஹெலிகோனியா போன்றவற்றிற்கு நல்ல கிராக்கி உள்ளது.இவற்றை மாநில அளவில் பல மலர் விற்பனை மையங்களுக்கும், கேரளாவில் உள்ள பல இடங்களுக்கும் சப்ளை செய்து வருகிறேன். மலர் கண்காட்சியில் நான் பங்கேற்பது இது இரண்டாவது முறையாகும். இந்த விளை பொருட்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது," என்றார்.

**வளர்ப்பு கோழிகள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : மே 22,2011,02:21 IST

பந்தலூர்:கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், பந்தலூரில் வளர்ப்பு கோழிகள் வழங்கப்பட்டன.பந்தலூர் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் உதவியாளர் வேணுகோபால் வரவேற்றார். டாக்டர்அரங்கநாதன் பயனாளிகளுக்கு கோழிகளை வழங்கி பேசுகையில்,""கால்நடை வளர்ப்பு மக்கள் மத்தியில் குறைந்து வருவதை போக்கிடவும்,

கால்நடை தொழிலை மேம்படுத்திடவும் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு கட்டமாக மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் மானியம் 25 சதவீதம் பெற்று பயனாளிகளுக்கு வளர்ப்பு கோழி வழங்கப்பட்டு வருகிறது. பந்தலூர் மற்றும் இதன் சுற்றுவட்டார பகுதிகளான உப்பட்டி, அத்திக்குன்னா, பொன்னானி, அத்திமாநகர், சேரம்பாடி நாயக்கன்சோலை, சேரங்கோடு உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 73 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு தலா பத்து கோழிகள் வீதம் வழங்கப்படுகிறது. இதற்கு கட்டணமாக 420 ரூபாய் பெறப்படுகிறது. வளர்ப்பு கோழிகளை பெற்ற பயனாளிகள் பொருளாதாரத்தை ஈட்டும் வகையில் வளர்த்திட வேண்டும்," என்றார். நிகழ்ச்சியில் உதவியாளர் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**தரமான காய்கறி விதை வழங்கல்:விவசாயிகள் பயனடைய அழைப்பு**

பதிவு செய்த நாள் : மே 22,2011,02:59 IST

உடுமலை:காய்கறி சாகுபடி விவசாயிகளுக்கு, தரமான விதைகள் கிடைக்க, விதை சான்று துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விதை ஆய்வு துணை இயக்குநர் பொன்னுசாமி நடேசன் அறிக்கை:விதை ஆய்வு துணை இயக்குனரகம் மூலம், விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பல காரணங்களால், விவசாயிகள், தனியார் பண்ணைகளில் நாற்றுகளை வாங்கி நடவு செய்கின்றனர். நாற்றுகளை வாங்கும் போது, விவசாயிகள் கண்காணிக்க வேண்டியவை:*

நாற்றுப் பண்ணை விதை ஆய்வு துணை இயக்குனரிடம் உரிமம் பெற்றிருக்க வேண்டும். *

**வேளாண் அறிவியல் நிலையத்தில் 26ம் தேதி இறால் வளர்ப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : மே 22,2011,01:28 IST

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 26ம் தேதி, நன்னீர் இறால் வளர்ப்பு பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, அதன் ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 26ம் தேதி, "நன்னீர் இறால் வளர்ப்பு' என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி நடக்க உள்ளது. பயிற்சியில், நன்னீர் இறால் மறறும் அதன் வகைகள், வளர்ப்பிற்கான இடத்தேர்வு, குஞ்சுகள் இருப்பு செய்தல், உணவு மேலாண்மை, நீர்த்தர மேலாண்மை மறறும் பொருளாதாரம் உட்பட அனைத்து தொழில்நுட்ப விபரங்களுகும கற்றுத்தரப்படும். அதில், விவசாயிகள்,

பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள பலரும் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்பும் நபர்கள், வரும் 25ம் தேதிக்குள் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது ஃபோன் மூலமாகவோ தங்களது பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கி.கிரியில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : மே 22,2011,00:44 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் வரும் 26ம் தேதி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது.

கலெக்டர் அருண்ராய் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 26ம் தேதி காலை 11 மணிக்கு கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது. கலெக்டர் அருண்ராய் தலைமை வகிக்கிறார். கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த அனைத்து விவசாயிகளும் தவறாமல் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவித்து நிர்வத்தி செய்து கொள்ளலாம்.

**தேயிலை இறக்குமதி 25 சதவீதம் சரிவு**

மே 22,2011,12:14



புதுடில்லி : கடந்த நிதியாண்டில் நாட்டின் தேயிலை இறக்குமதி 25 சதவீதமாக சரிவடைந்துள்ளது. கடந்த ஆண்டு 19.26 மில்லியன் கிலோ தேயிலை மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டதாக தேயிலை கழகம் வெளியிட்டுள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு முந்தை ஆண்டில் 25.84 மில்லியன் கிலோ தேயிலை இறக்குமதி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. உலகத்திலேயே அதிகளவில் தேயிலை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யும் மிகப்பெரிய நாடு இந்தியா ஆகும். இருப்பினும் தற்போது இதன் இறக்குமதி சரிவடைந்து வருவது தேயிலை தோட்ட விவசாயிகளிடம் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. 2009-10ம் ஆண்டில்

தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து 7.21 மில்லியன் கிலோ தேயிலையை இந்தியா இறக்குமதி செய்துள்ளது.

**சரிந்தது வத்தல், துவரை மந்த நிலையால் தேக்கம்**

மே 22,2011,02:01



விருதுநகர்:விருதுநகர் மார்க்கெட்டில் வத்தல் விலை குவிண்டாலுக்கு 400, துவரை மூடைக்கு 200 ரூபாய் குறைந்துள்ள நிலையில், ரவை மூடைக்கு 30 ரூபாய் உ யர்ந்துள்ளது. இதைதொடர்ந்து, மார்க்கெட்டில் மந்த நிலை நீடிப்பதால் சரக்கு வரத்தும், விற்பனையும் குறைந்து, தேக்கம் ஏற்பட்டுள்ளது. விருதுநகர் மார்க்கெட்டில் சர்க்கரை விலை மூடைக்கு 2795 ரூபாயாக உள்ளது. கடலெண்ணெய் டின்னுக்கு 1350, சூரியகாந்தி எண்ணெய் 1170, பாமாயில் 910 ரூபாயாக உள்ளது. நிலக்கடலைப் பருப்பு 4100, கடலைப் புண்ணாக்கு மூடை 2800 ரூபாயாகவும் உள்ளது. உளுந்து விலை மூடைக்கு 4900 லிருந்து 4800 ஆகவும், சுமார் ரக உளுந்து 4100 லிருந்து 4900, பர்மா பருவட்டு உளுந்து 5100 லிருந்து 4900. நயம் உளுந்தம் பருப்பு 6400, பர்மா பருவட்டு பருப்பு 6200 ரூபாயாக உள்ளது. துவரை 3800 லிருந்து 3600, பொடி துவரை 3000 லிருந்து 2800 ஆக குறைந்துள்ளது. துவரம் பருப்பு 5700, பொடி துவரம் பருப்பு 4600 ரூபாயாக உள்ளது. பாசிப்பயறு 6400 , லயன் பருவட்டு 3900, சுமார் ரகம் 3700 ரூபாயாக உள்ளது. பாசிப்பருப்பு 5700, சுமார் ரகம் 5500 ரூபாயாக உள்ளது. மைதா 2180, ரவை 2140 லிருந்து 2170 ரூபாயாக உயர்ந்துள்ளது. கொண்டைக்கடலை 2700, பொரிகடலை 2080 ரூபாயாக உள்ளது.

மிளகாய் புது வத்தல் 8800 லிருந்து 8400 ஆக குறைந்துள்ளது. முண்டு வத்தல் 7800 லிருந்து 7,500 ரூபாயாக குறைந்துள்ளது. சோடை வத்தல் 3200, பழைய சோடை வத்தல் 2400 ரூபாயாக உள்ளது.'மிளகாய் வத்தல் வரத்து குறைந்து ,மார்க்கெட்டில் மந்த நிலை நிலவுவதால், விலை குறைந்துள்ளதாக,'வியாபாரிகள் தெரிவித்தனர்.

**காபி ஏற்றுமதி 2.40 லட்சம் டன்னாக குறையும்**

மே 22,2011,02:05



புதுடில்லி:நாட்டின் காபி ஏற்றுமதி, வரும் 2011-12ம் ஆண்டு காபி பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்), 2.40 லட்சம் டன்னாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, சென்ற காபி பருவத்தில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 16.7 சதவீதம் குறைவாக இருக்கும் என அமெரிக்க வேளாண் துறை வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளது. சென்ற செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த, காபி பருவத்தில், நாட்டின் காபி உற்பத்தி 3.05 லட்சம் டன்னாக இருந்தது. இது வரும் காபி பருவத்தில், 2.89 லட்சம் டன்னாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற காபி பருவத்தின் இறுதியில், 1,080 டன் காபி கையிருப்பில் இருந்தது.நடப்பு பருவத்தில், காபி அதிகளவில் உற்பத்தியாகும் பகுதிகளில், பூச்சி தாக்குதல் இருந்ததால், இவ்வாண்டு காபி உற்பத்தி குறையும் என அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது.

தினகரன்

## விளைச்சல் அதிகரிப்பால் அரிசி, கோதுமை ஏற்றுமதி?

பதிவு செய்த நாள் 5/23/2011 1:39:48 AM



புதுடெல்லி: விளைச்சல் அதிகரிப்பு காரணமாக அரிசி, கோதுமை ஏற்றுமதிக்கு அனுமதி வழங்க வாய்ப்பு உள்ளதாக அரசு வட்டாரம் தெரிவித்துள்ளது. கடந்த 2010&11ம் நிதியாண்டில் 8.14 கோடி டன் கோதுமை உற்பத்தியானது. மேலும் அரிசி உற்பத்தி 9.4 கோடியாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் அடுத்த 2 வாரத்தில் மத்திய நிதியமைச்சர் பிரணாப் தலைமையில் அதிகாரமிக்க அமைச்சரவை குழு கூடுகிறது. விளைச்சலில் சாதகமான சூழல் எட்டப்பட்டதால் அப்போது அரிசி, கோதுமை ஏற்றுமதிக்கு அனுமதி வழங்க வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## உற்பத்தி அதிகரிப்பு ரப்பர் விலை குறைகிறது

பதிவு செய்த நாள் 5/23/2011 1:40:48 AM



புதுடெல்லி : உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு காரணமாக இம்மாத இறுதியில் ரப்பர் விலை குறைய வாய்ப்புள்ளதாக இத்துறை சார்ந்த வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.
உள்நாட்டில் ரப்பர் உற்பத்தி அதிகரித்துள்ளது.

அத்துடன் வெளிநாடுகளில் இருந்து மலிவான விலையில் ரப்பர் இறக்குமதி செய்யப்படுகிறது. இதனால் தற்போது சந்தையில் ^222க்கு விற்பனையாகும் ஒரு கிலோ ரப்பர், மே இறுதியில் ரூ.200க்கு விற்பனையாக வாய்ப்பு உள்ளது.

மேலும் உலக அளவில் ரப்பர் விலை குறைந்து வருவதால் நம்நாட்டிலும் கணிசமாக குறையும். பருவ மழை பரவலாக பெய்யும் என்பதால் நடப்பு 2011&12ம் நிதியாண்டில் நாட்டின் இயற்கை ரப்பர் உற்பத்தி 9.02 லட்சம் டன்னை தொடும் என எதிர்பார்க்கப்படுவதாக வல்லுநர்கள் தெரிவித்தனர்.